செய்தி வெளியீடு எண் : 1725 நாள் : 02.10.2022

## செய்தி வெளியீடு

இன்று (02.10.2022) சென்னை, கானத்தூரில் உத்தமர் காந்தியடிகள் அவர்களின் 154ஆவது பிறந்தநாளை முன்னிட்டு தமிழக அரசின் காதி மற்றும் கைத்தறித் துறை மற்றும் அமெட் பல்கலைக்கழகம் இணைந்து "கை கொடுப்போம் காதிக்கும் கைத்தறிக்கும்" என்ற சமூக சேவை திட்டத்தின் முலம் ஒரே நாளில் ஒரு கோடி மதிப்பிலான காதி மற்றும் கைத்தறி துணிகளை விற்பனை செய்யும் நிகழ்ச்சியை மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் திரு.ஆர்.காந்தி அவர்கள் கொடியசைத்து தொடங்கி வைத்தார்.

தமிழ்நாட்டிலுள்ள நெசவாளர்கள் தரமானதும், விலைக் குறைவானதுமான காதி மற்றும் கைத்தறி துணிகளை கண்கவரும் வடிவமைப்புகளுடன் நெய்வதை தொழிலாகக் கொண்டுள்ளனர்.

பிற நிறுவனங்கள் பெரும் செலவில் கவர்ச்சிமிகு விளம்பரங்களை செய்து வெளிச்சந்தையில் அவர்களின் தயாரிப்புகளை விற்பனை செய்கின்ற நிலையில் வியாபாரப் போட்டிச் சந்தையில், பல கோடி மதிப்பிலான காதி மற்றும் கைத்தறி துணிகளை விற்பனை செய்வதில் சிரமங்கள் உள்ளது. இதனால் நெசவுத் தொழில் செய்வோர்க்கு ஆண்டு முழுவதும் தொடர் வேலைவாய்ப்பு வழங்க இயலாததால் நெசவாளர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்படுகிறது.

தமிழக அரசின் காதி மற்றும் கைத்தறித் துறையின் கீழ் நெசவுப் பணி செய்யும் நெசவாளர்களுக்கு கை கொடுத்து உதவும் பொருட்டு, அவர்களால் தயாரிக்கப்பட்ட துணிகள் மற்றும் பொருட்களை, தேசத் தந்தை காந்தியடிகள் பிறந்த நாளான அக்டோபர் 2, 2022 ஞாயிற்றுக்கிழமை இன்று அமெட் பல்கலைக்கழகத்தின் சுமார் 4000 மாணவ, மாணவிகள், ஆசிரியர்கள் மற்றும் அலுவலர்கள் காலை 9 மணி முதல் மாலை 5 மணி வரையில் கலைஞர் கருணாநிதி சாலை மற்றும் இராஜீவ் காந்தி சாலை பகுதிகளில் வீடு வீடாகச் சென்று விற்பனை செய்யவதென்ற ஒரு சமூக சேவைத் திட்டத்தை முன்னெடுத்துள்ளனர். இத்திட்டத்தின்படி ஒரே நாளில் குறைந்தது ரூ.1 கோடி மதிப்பிலான காதி மற்றும் கைத்தறி துணிகளுடன், கிராமப் பொருட்களையும் விற்பனை செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

இந்த சமூக சேவைத்திட்டத்தினை மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் திரு.ஆர்.காந்தி அவர்கள் இன்று (02.10.2022) அமெட் பல்கலைக்கழக வளாகத்தில் 15 விற்பனை வாகனங்களை கொடியசைத்து தொடங்கி வைத்தார்கள். அப்போது அமைச்சர் அவர்கள் நெசவாளர்கள், கைவினைஞர்களின் நலன் காக்கும் இந்த உன்னத திட்டத்தில் நமது நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்து வந்து இப்பல்கலைகழகத்தில் படித்துக் கொண்டுள்ளதுடன் தன்னை சமூக சேவையில் ஈடுபடுத்திக் கொண்டுள்ள பல்வேறு மாணவர்களின் முயற்சிக்கு பாராட்டுகளை தெரிவித்தார்கள்

பல ஆண்டுகளுக்கு முன்னர் பேரறிஞர் அண்ணா அவர்களும் தலைவர் கலைஞர் அவர்களும் கைத்தறி நெசவாளர்களின துயரை துடைத்திட கைத்தறி துணிகளை தலையிலும் தோளிலும் சுமந்து விற்பனை செய்து நெசவாளர்களுக்கு உதவியுள்ளார்கள். மாண்புமிகு தமிழக முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்களின் தலைமையிலான இந்த அரசு நெசவாளர்கள் மற்றும் கிராமத் தொழிலில் ஈடுபடும் தொழிலாளர்களுக்காக தொடர்ந்து பல சீரிய திட்டங்களை அறிமுகப்படுத்தி வந்துள்ளார்கள். குறிப்பாக Co–optex மற்றும் காதி பொருட்களை பெருமளவில் விற்பனை செய்ய விற்பனை மையங்கள் புதுப்பித்தல், பணியாளர்களுக்கு பயிற்சி அளித்தல், ஆன்லைன் விற்பனை, புதிய டிசைன் அறிமுகம், விளம்பரம் மற்றும் மொபைல் ஆப் ஆகியவைகள் செய்யப்பட்டதால் கோஆப்டெக்சில் இதுவரை இல்லாத அளவாக ரூ.155.00 கோடி விற்பனை சென்ற ஆண்டிலும் இந்த ஆண்டில் ரூ.55.00 கோடியும் செய்யப்பட்டுள்ளது. தீபாவளி விற்பனை இலக்காக ரூ.175.00 கோடி நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

காதி துறையிலும் புதிய வகை எம்ப்ராய்டிரீ மற்றும் பிரிண்ட்டு பட்டு புடவைகள், புதிய சோப்புகள், மரச்செக்கு எண்ணெய் வகைகள், பாரம்பரிய அரிசி வகைகள், சிறுதானிய வகைகள் விற்பனை அறிமுகப்படுத்தியதன் காரணமாக சென்ற ஆண்டு ரூ.47.00 கோடியாக சாதனை விற்பனை செய்யப்பட்டு, இந்த ஆண்டு ரூ.60.00 கோடி இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

கலைஞர் கருணாநிதி சாலை மற்றும் இராஜீவ் காந்தி சாலை பகுதிகளில் வசிக்கும் பொதுமக்கள் காதி, கைத்தறி துணிகள் மற்றும் கிராமப் பொருட்களை வாங்கி இந்த புதிய முயற்சிக்கு உறுதுணையாக இருந்து நெசவாளர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த உதவ

வேண்டுமென தமிழக அரசின் சார்பிலும், அமெட் பல்கலைக் கழகத்தின் சார்பிலும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வேண்டுகோள் விடுத்தார்கள்.

இத்திட்டத்தின் தொடக்க விழாவில் கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர் துறையின் அரசு முதன்மை செயலாளர் திரு.தர்மேந்திர பிரதாப் யாதவ் இ.ஆ.ப., கைத்தறித் துறையின் ஆணையர் திரு.டி.பி.ராஜேஷ் இ.ஆ.ப., அவர்களும், தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தின் தலைமை செயல் அலுவலர் முனைவர் பொ.சங்கர் இ.ஆ.ப., அவர்களும், அமெட் பல்கலை கழகத்தின் நிறுவனர் மற்றும் வேந்தர் டாக்டர். நாசே ராமச்சந்திரன், அவர்களும், அமெட் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் கர்னல் முனைவர் க.திருவாசகம் அவர்களும், அமெட் பல்கலைக்கழகத்தின் பதிவாளர் திரு.ஜெயபிரகாஷ்வேல் அவர்களும், அமெட் பல்கலைக்கழகத்தின் முதல்வர் (Dean) முனைவர் என்.ஆர்.ராம்குமார், அவர்களும், காதி மற்றும் கைத்தறி துறையின் அலுவலர்களும் கலந்து கொண்டனர்.

*********

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in